## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 03/2019

வாக்குமூலம்..வா.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆரோக்கிய சாமி | தொழில் | |
| த/பெ. | யாக்கோப்பு | வயது | 65/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 25.02.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கின் 3-ம் தரப்பினர். வாதி தரப்பின் 4-வது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் குறியீடு இல்லை.

**1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகளை எனக்கு சிறுபிள்ளையில் இருந்து தெரியும். 1-ம் பிரதிவாதி எந்த வருடம் தாவா சொத்தினை கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய போது 1,2 ம் வாதிகளுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 20 வயது இருக்கும். வழக்கு விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. அண்ணாமலையின் மனைவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நீண்ட காலம் வைத்தியம் பார்த்து வந்தது தெரியும். அண்ணாமலையின் மனைவிக்கு வைத்தியம் பார்க்க தாவா சொத்தினை விற்க முயற்சித்தபோது வாதிகள் மோசடியாக வழக்கு போட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வாதிகள் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. 2-ம் வாதி செல்வம் தான் அழைத்து வந்தார். நிரூபணவாக்குமூல விவரம் நான்தான் சொன்னேன். சாட்சி தற்போது வாதிகள்தான் வழக்கறிஞரிடம் சொன்னதாக கூறுகிறார். தாவா 2-வது அயிட்ட சொத்து காளி மகன் நடேசனுக்கு சொந்தமான சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆதியில் தாவா 2-வது அயிட்ட சொத்து காளி மகன் நடேசனுக்குதான்

சொந்தமாக இருந்து அவர் இறந்த பிறகு அவரது மனைவி அஞ்சாமலுக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். தாவா 2-வது அயிட்ட சொத்தில் வடபுறம் 26 சென்ட் இடத்தை கடந்த 08.05.1997-ம் தேதியில் சுப்பிரமணிய புரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 173/97 படி தகுந்த பிரவி பிரயோஜனத்திற்கு 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

2 .2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து நாளது தேதிவரை 2-ம் பிரதிவாதி மாரிமுத்து கோனார் அனுபவத்தில் உள்ளதா என்றால் இல்லை. மாரிமுத்து கோனார் கிரையம் வாங்கியதில் இருந்து நாளது தேதிவரை நெல் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார். வழக்கு 2-வது அயிட்ட சொத்து வாதிகள் அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த நீதிமன்றத்தில் எத்தனை வழக்கு நடத்தியிருக்கிறேன் என்றால் 2 வழக்குகள் நடத்தியிருக்கிறேன். இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நிரூபணவாக்குமூல விவரங்கள் 1-ம் வாதி ராஜங்கம் தான் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் விவரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் ஒரு சொத்து 1-ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மற்றொரு வழக்கு சொத்தினை மாரிமுத்து கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தினை வாதிகள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள். வழக்கிற்காக வாதிகள் தான் விவசாயம் செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. அண்ணாமலை கிரையம் பெற்ற சொத்தினை அண்ணாமலையும், மாரிமுத்து கிரையம் பெற்ற சொத்தினை மாரிமுத்துவும் எழுதி தர உரிமை உள்ளது என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் பதிவுகிரையம் பெற்ற நபர் மேற்படி கிரைய சொத்தினை வேறு நபர்களுக்கு விற்க கூடாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.